உயிர்ச் சிறகுகள்

俳句

ஹைக்கூ - கவிதைகள்

ஒலுவில்
அஸீஸ் எம். பாயிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

[illegible]

2001.05.26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ச் சிறகுகள்

俳句

ஹைக்கூ - கவிதைகள்

ஒலுவில்
அஸீஸ் எம். பாயிஸ்

வெளியீடு :
மின்னல் வெளியீட்டகம்
ஒலுவில் - 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ச் சிறகுகள்

(ஹைக்கூக் கவிதைகள்)

அஸீஸ் எம். பாயிஸ்

பதிப்புரிமை	:	ஆசிரியருக்கு
முதற்பதிப்பு	:	2001, ஜுலை
வெளியீடு	:	மின்னல் வெளியீட்டகம் டிஸ்கவறி மல்டி கோணர் நெசவு நிலைய வீதி, ஒலுவில் - 02
அட்டைப்படம்	:	ஆசிரியர்
கணனி வடிவமைப்பு	:	சுப்பர்கொம் கொம்பியூட்டர், அக்கரைப்பற்று.
அச்சுப்பதிப்பு	:	மெற்றோ ஓப்செட் பிரதானவீதி, அக்கரைப்பற்று
பக்கம்	:	(XXII + 49) = 71
பிரதிகள்	:	500
விலை	:	70/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம - அர்ப்பணம்



இலக்கிய உலகினுள் நான் கால்
பதிக்க உந்து சக்தியாயிருந்து என் கவித்துவம்
வளர உரமிட்ட என்னருமை நண்பர்கள்
B.A.அப்துல் வஹாப், N. L. பௌசுல் கபீர்
ஆகியோருக்கும்

என்னுயிர்த்தாய் பாத்திமா, என்னன்புத்தந்தை
அப்துல் அஸீஸ் ஆகியோருக்குமாக இந்நூலைச் சமர்ப்பணம் செய்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹைக்கூ ஓர் அறிமுகம்

அது 'அதுவாகி' இருக்கும் நிலையில், உணர்த்துவதும் உணர்வதும் ஒன்றாகிவிடுகின்ற நிலையில் ஆன்மிகம் என்றோ ரசனை என்றோ, வரையறுத்துக் கூறப்பட இயலாத அனுபவமே, ''ஹைக்கூ' கவிதை. Zen நிலை என்று இது கூறப்படுகின்றது. வடிவமே பொருளாகிவிடும் போது, இதற்கு விளக்க உரை சொல்வது வீண் வேலை. 'ஹைக்கூ' ஒரு வழி. வழிகளை உணரும்போது, முடிவும் அதுதான் என்ற அனுபவம் ஏற்படுகிறது. இதைப் படிக்கும் போது, தீக்குள் விரலை வைத்தால் ஏற்படும் தீண்டும் இன்பம் புலனாக வேண்டும். சொற்களைப் பொருள் விளக்கத்தில் விரயமாக்கினால், அதுவே அந்த அனுபவத்தின் மரணம்.

இது உருவகமும் இல்லை: உவமையுமில்லை. அல்லது வேறு எதனுடனோ இணைத்தறியும் கருத்தும் இல்லை. இது Satori. அதாவது உள்ளுணர்வின் மூலம் ஏற்படும் விழிப்புத் தருணம். 'இப்பொழுது, இங்கே, இதுவே' என்ற மனப்பாங்கு. அடி மனத்தில் புறப்பட்டு அக்கணத்திலேயே எழுத்து வடிவம் கொள்ளும் உடன் நிகழ்வு.

5 : 7 :5 என்ற வகையில் 17 சீர்களைக் கொண்டது ஹைக்கூ.

தோக்கு காவா (1603-1770) காலத்தில் 'ஹோக்கு' என்று கூறப்பட்டதே பிறகு ஹைக்கூ ஆயிற்று. ஹோக்கு என்றால் ரெங்கா, அழைக்கப்பட்ட நிகழ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம். பருவம், நேரம், மலையா, கடற்பகுதியா என்ற நிலப்பகுதி வரையறை ஆகிய வற்றைக் குறிப்பதற்கு ஹோக்கு பயன்பட்டது. இப்பொழுதும் ஹைக் கூவில் இதைக் காண முடிகிறது. ஆனால் நேடியான சுட்டு இல்லை. குறிப்பினால் உணரப்பட வேண்டிய உட்கருத்து.

பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த 'மாட்சுனகா டேய்தோக்கு' (Matsunaga Teitoku) என்ற மரபுக் கவிஞர், நகைச் சுவை உணர்வுக் காக அப்பொழுது பயன்பட்டுக் கொண்டிருந்த இந்த ஹைக்கூ வடிவத்தில் கவிதைகள் புனையத் தொடங்கி, இதற்கு ஓர் இலக்கிய கவுரவத்தைத் தந்தார் என்று கூறுகிறார்கள்.

ஆனால் பிறகு வந்த Nishiyama Soin ம் Lhara Saitaku வும் ஹைக்கூ கவிதையில் பேச்சு நடைச் சொற் களைக் கலந்து, அதன் செவ்வி யல் தன்மையில் எளிமையையும், ஓர் இயல்பான ஓட்டத்தையும் புகுத்தினார்கள். இவர்களுக்குப் பிறகு வந்த Matsuo Basho தான் இக்கவிதைக்கு இப்பொழுதுள்ள ஏற்றத்தையும் தோற்றத்தையும் தந்தவர். ஓவியத்தில் ஒரு சில வரிக்கோடுகளின் மூலம் பிரபஞ் சத்தைச் சித்தரிப்பது போல், பிரமிக் கத்தக்க சொற்சிக்கனத்தில், பிரமி ப்புத்தரும் ஒரு புதிய கவிதை உலகம் நம் கண்ணுக்குப் புலனாகியது.

ஹைக்கூவில் பயின்று வரும் சொற்களின் மூலம், பருவம், நேரம், நிலப்பகுதி வரையறை ஆகியவை தெரிந்ததாக வேண்டுமென்பது, நம் சங்க காலத்து அகப்பாடல்களின் இலக்கிய மரபை நினைவூட்டு கின்றது.

'பொம்மை விழா' என்றால் வசந்த காலத்தையும், பகல் நேர உறக்கம் என்றால் கோடை காலத்தையும், 'பார்லி வித்திடு' வதென்றால் குளிர்காலத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கின்றன என்பது இலக்கிய மரபு. நம் இலக்கியங்களில் கூறப் படுவதுபோல், இவை மயங்கி வருவதுமுண்டு. பருவம் குறிக்கப் படாமலேயே வரும் விதிவிலக்கு களும் உள்ளன.

'நன்றே காதலர் சென்ற வாறே
அணி நிற இரும்பொறை
மீமிசை மணிநிற உருவின
தோகையு முடைத்தே'

'காதலன் சென்ற வழி
அழகு மலை உச்சி
தோகை விரித்த மயில்கள்'

என்று 'ஐங்குறுநூறு' பாட்டு ஒன்றை ஹைக்கூ கவிதையாகவும் சொல்ல முடியும். தோகை விரித்த மயில்கள் என்பதால் கார்காலம் என்று உணர முடிகிறது. 'மலை' என்பதால் தலைவி ஆற்றியிருக்க வேண்டுமென்று அறிகிறோம். ஆகவே இது முல்லை நிலம்.

இவ்வாறு, 'ஐங்குறுநூறு', 'குறுந்தொகை' ஆகிய நம் அகத் துறை இலக்கியப் பாக்கள் பலவற்றை ஹைக்கூ வடிவத்தில் கூற இயலும்.

'வானம்
வெகு நேரமாய் காலியாய் இருக்கிறது
ஒரு வெண் புறா
நிச்சயம் வரும்'

இது தமிழில் அண்மையில் வெளிவந்துள்ள ஹைக்கூ. இதில் 'வானம்', 'காலி', 'வெண்மை' ஆகிய அருவங்களுக்கு இடையே, திடீரெனக் கனத்த அமைதியின் மீது கல்லெறியப்படுவதுபோல், பருண்மையான 'புறா' கண்முன் வந்து நிற்கிறது. அருவம், உருவத்தின் மறுபக்கம்.

சூன்யம் (காலி) நிறைவின் மறு பக்கம். பாட்டை விளக்க இயலாது. இதுவும் அற்புதமான ஒரு Zen கவிதை.

'முட்டை கொண்டு
திட்டை ஏறும் எறும்புகள்
அவள் எழுத்துகள்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கும் போதே சாரி சாரியாகச் செல்லும் எறும்பின் ஊர்வலக் காட்சி சித்திரமாய்த் தோன்றுகிறது. இப்பாட்டு அர்த்தப் பொதியைச் சுமக்காமல் சுமக்கும் ஹைக்கூ. அவள் எழுத்துக்கள், தாளில் ஊர்ந்து செல்லும் நிலையிலேயே, பொருளின் குறியீடுகளாக இல்லாமல், அர்த்தப்படுகின்றன. படிக்கின்றபோது ஏற்படும் அனுபவம் நம்மைச் சிலிர்க்க வைக்கின்றது. இது கவிக்கோவின் ஒரு ஹைக்கூ. The celestial and earthly process can be defined in a single phrase; its actions and its creations have no duality; The arrow has no two points' என்கிறார் Ezra Pound. அதாவது, ஒரு நல்ல கவிதை என்னும் போது, அதன் வடிவமும், கருத்தும் ஒரு முனைப்பட்டு இருக்கும் நிலையில், அதன் உடனடி நிகழ்வில், படிக்கின்றவர்களின் அனுபவமாக ஒன்றியைய வேண்டும்.

இது ஒரு நல்ல ஹைக்கூ கவிதையில்தான் சாத்தியம். அதில் தேவையில்லாத வருணனைகளோ, அல்லது சிந்தனை அனுபவத்தையும் இதய உணர்ச்சி அனுபவத்தையும் தனித்தனியாக வேறுபடுத்திக் காட்டித்தருகின்ற சொல்லாட்சி அமைப்போ இருக்காது. அது அதுவாகவே இருந்து அம்பின் கூர்முனையைப்போல் விளக்கிக் காட்ட முடியாததை, சுட்டும் நிலையிலேயே, வாசிக்கின்றவர்களின் அனுபவமாக அமைய வேண்டும்.

Quitening the mind
Deep in the forest
Water drips down

இது ஹோராஷா என்பவரின் கவிதை. 'காலம்' (Time) கணம் கணமாக நீர்த்துளிபோலச் சொட்டிக் கொண்டிருக்கிறது என்கிற மாதிரி அனுபவம், ஜப்பானிய மூலத்தைப் படிக்கும் போது ஏற்படுகிறது என்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mind (மனது) Forest (காடு) என்கிற சொற்கள் படிக்கின்ற வர்களின் அடி மனத்தில் வடிவம் இல்லாத பிணைப்புக்களை மங்க லாக ஏற்படுத்தித் தருக்கின்றன. ஜப்பானிய க்விதையில் எதுவுமே வரையறுக்கப்பட்டு, தொடக்கம், தொடர்ச்சி, முடிவு என்பதுபோல் கூறப்படுவதில்லை என்கிறார்கள். அதன் Twilight Zones (சந்தி மயக் கங்கள்) போன்ற அமைப்போ, எதுவுமே தொடர்ந்து முடிவில்லா மல் உருவாகிக் கொண்டிருக்கிற (Continuous becoming) வாழ்க்கைத் தத்துவத்தைக் காட்டுகிறது என்கிறார் Ezra Pound. அவர் சீன மொழியில் உள்ள கன்.`பூஷியசின் கருத்துக்களை கருத்து மொழி யாக்கம் செய்யும்போது ஜப்பானிய, சீன மொர்ழிக் கவிதை களை விமர்சித்து இவ்வாறு கூறுகிறார். அவர் கருத்தின்படி ஹீப்று மொழியிலுள்ள பைபிளுக்கு நேர்நிகரான மொழி ஆக்கம் ஜப்பானிய மொழியில்தான் உள்ளது.

ஹைக்கூவில் ஆளப்படுகின்ற சொற்கள் மிகவும் எளிமையான வை. கருத்திலும் எந்த ஆர்ப்பாட் டமும் கிடையாது. ஆனால் அக் கவிதையைப் படிக்கும் போதே ஏற்படும் அனுபவம் விளக்கிச் சொல்ல முடியாத அலாதி இன்பம்.

This is happiness
The moonlight and in quiet pool
And a sense of now

Shade of summer trees
Almost reaches my desk
With the gentle breze

ஹைக்கூ கவிதையில் தன் முனைப்பு (Ego) அறவே தெரியாது. Zen சித்தாந்தத்தின்படி (Egoless ness). ஆகவே தன்மை முன்னிலை என்றில்லாமல் Impersonal ஆக நேரடியாக எழுதுப்படுவதுதான் அதன் மரபு. மொழிபெயர்த்துப் பாக்கும் போது தந்தி மொழி போலிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடு நுழைவு புல் அசை இல்லை

ஆறு நுழைவு நீர் அசை இல்லை

புல் கூட நோகாமல் காட்டுக்குள் நுழைய வேண்டுமென்பதும், நீர்த்துளியும் நோகாமல் ஆற்றில் புக வேண்டுமென்பதும் இங்கே கூறப்படுகிறது.

ஜேம்ஸ் ஜாய்ஸ் இத்தந்தி மொழியை, ஹைக்கூவின் பாதிப்பினாலோ என்னவோ Finnegans Wake என்ற தம் நாவலில் கையாள்கிறார்.

End here. Us there. Fin again! Take. Bussoftlhee, mememormee! Till! thousandthee, LPS. The Reys to. Given! A way a lone a last a loud a long the.

ஒலியும் பொருளும் ஒன்றாவது என்பது ஜப்பானிய ஹைக்கூவில் நிகழ்வதொன்று. ஜேம்ஸ் ஜாய்ஸ், பல ஒலிக் குறிப்புக்களைச் சொற்களாக்கியிருக்கிறார். இதை ஆங்கிலத்தில் Onomatopoeia என்பார்கள்.

The moan of doves in immemorial elms and murmuring of innumerable bees. (Tennyson) Buson ஹைக்கூவில், சொல்லும் விதத்திலேயே கடலொலியைக் கேட்கலாம் என்பார்கள்.

நன்றி : யாத்ரா.

இதயவுரை

Dear My Own Friend Faiz,

உன்னுடைய கவிதைகளைப் பார்க்கும் போது ஒரு "மகாகவி" உன்னுள் உருவாகி வருவதை என்னால் உணரமுடிகின்றது. என்னுடைய ஒரு நண்பன் இவ்வாறு இருப்பதையிட்டு நான் மிகவும் பெருமைப்படுகின்றேன். உன் கவிதைகளைப் படித்த போது உன்னைப் பற்றி எனக்குள் எழுந்த ஒரு ஹைக்கூ இது;

கவிதைக்குமா

ஒரு அமுத சுரபீ....?

கவிஞன் பாயிஸ் !

கவிஞர் அஷ்ஷெய்க் இஷட். எம். நிலாம், (நளீமி) ஒலுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

இவரிடம் கவித்துவ ஆற்றல் உண்டு

ஜப்பானிய கவிதை வடிவமான ஹைக்கூ அந்த நாட்டையும் தாண்டி, பிரித்தானியா, பிரான்சு போன்ற மேலைநாட்டுக் கவிதை இலக்கியத்திலும் செல்வாக்குச் செலுத்தியது. தமிழிலும் ஹைக்கூக் கவிதைகள் 1970 களின் பின்னர் அறிமுகமாயிற்று. இலங்கையில் 1980களின் பின்னரைப் பகுதியில் ஹைக்கூ எழுதும் ஆர்வம் முகிழ்த்தது. ஹைக்கூ என்ற பெயரில் மூன்றடிக் கவிதைகள் நிறைய பத்திரிக்கைகளில் பவனி வந்தன. ஹைக்கூவுக்கென்றே தனி இதழ்களும் வெளிவந்தன.

இலங்கையில் புதுக்கவிதையின் வளர்ச்சிப் பரிணாமமாக ஹைக்கூவில் ஈடுபாடு காட்டப்பட்டாலும் இது ஜப்பானிய பாரம்பரியக் கவிதை வடிவமே யொழிய புதுக்கவிதையல்ல. 5 + 7 + 5 என அசைக்கட்டுப்பாடும் ஜப்பானிய ஹைக்கூவுக்குண்டு.

தமிழில் இந்த அசைகளைப் பேணாமல் எதுகை, மோனைகளைக் களைந்து எழுதப்பட்டமையாலும், குறியீட்டு உத்தி தழுவியமையாலும் புதுக்கவிதை வடிவமாகவே இனங்காணப் பழகி விட்டோம்.

தற்போது மீண்டும் இளம் படைப்பாளிகள் மத்தியில் ஹைக்கூ எழுதும் ஆர்வம் அலைமோதி வருகிறது. நிறைய இளசுகளுக்கு வாய்ப்பு வழங்க இடவசதியின்றித் தவித்த சஞ்சிகைகள், பத்திரிக்கைளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயில்கள் கடுகு வடிவமான ஹைறக்கூவைக் கண்டதும் திறந்து கொள்வது வியப்பல்ல. இடவசதியைக் கவனித்த இதழாசிரியர்கள் தரத்தை அவதானிக்கவில்லை. இதனால் விடு க(வி)தைகளே அதிகமதிகம் பிரசுரமாயிற்று. இரண்டு வரிகளில் விளக்கத்தைக் கொடுத்து கடைசி வரியில் விடையைப் போடுவது இன்றைய ஹைறக்கூவின் பொதுப் பண்பு. இதனால் ஒரு பிரமிப்புணர்வு மாத்திரமே ஏற்படுகின்றது.

இக்கால கட்டத்தில் ஒலுவில் இளங் கவிஞர் அஸீஸ் எம். பாயிஸின் ''ஹைறக்கூ'' கவிதைத்தொகுப்பு வெளிவருவது உண்மையில் மகிழ்ச்சிக்குரியது. தற்சமயம் நமது நாட்டில் வெளிவரும் ஹைறக்கூக் கவிதைகளின் பொதுப் பண்புகளை மீறி ''அசல் ஹைறக்கூ'' இயலப்பு கொண்ட பல கவிதைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

''ஸென்'' பௌத்த தத்துவத்தைச் சுருங்கக்கூறும் கவிதைகளாகவே ஜப்பானிய ஹைறக்கூ உருவானது. இயற்கையின் தரிசனங்களே இக் கவிதைகளில் காட்சி ரூபம் தருகின்றன. வெளிப்பார்வைக்கு அழகியற் கவிதை போல தெரிந்தாலும் தத்துவ விளக்கத்தின் குறியீடுகளாகவே இக்காட்சிகள் அமைகின்றன. தமிழில் ஹைறக்கூவைப் பயன்படுத்திய வர்கள் அதன் ஆன்ம வாத உள்ளடக்கத்தை மாற்றி சமூக விமர்ச் சனத்துக்குப் பயன்படுத்தினர். ஆனால் கவிஞர் பாயிஸ் ஹைறக்கூவை சிருங்காரத்திற்கும் கூட சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார்.

என் காதல் காவியத்திற்கு
நீயளித்த மாபெரும் பரிசு .....
மௌனம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலியை விளித்து மூன்றே வரிகளில் எதனையும் வெளிப்படுத்தலாம். அஸீஸ் எம். பாயிஸின் கவிதைகளில் அழகியலும், சொற் செட்டும் நன்கு அமைந்துள்ளன.

தமிழன்பன் ஹைக்கூவை சமூக விமர்சனத்துக்குப் பயன்படுத்தியுள்ளார். மிகை யதார்த்தப் பண்பையும் அவரது சில கவிதகளில் காணலாம். அஸீஸ் எம். பாயிஸின் கவிதைகள் கூட யதார்த்தப் பண்பைத் தாண்டியதாகத் தெரியவில்லை.

நேரடி விளக்கம் ஹைக்கூவில் இடம்பெற முடியாது என்பதை நமது இளங் கவிஞர்கள் பலரும் மறந்து விடுகிறார்கள். இயற்கையின் பங்காளிகளான பூக்கள், செடி கொடிகள், ஊர்வன, விலங்குகள் இவைதாம் கவிதா பாத்திரங்கள். புதிய கவிஞர்கள் மனிதனல்லாத செயற்கைப் பொருட்களையும் ஹைக்கூப் பாத்திரங்களாக வரித்துக் கொள்வர்.

துண்டுச் சிகரெட்டை
தெருவில் அணைத்து விட்டு – இருமுறை
இருமியது மழைத்துளி !
(தமிழன்பன்)

சிகரெட் என்ற செயற்கைப் பொருள் இடம்பெற்றாலும் இங்கு நடப்பியல் (Realizm) மீறப்பட்டுள்ளமை ஒரு தனிச்சுவையைக் கொடுக்கிறது. அஸீஸ் எம். பாயிஸின் கவிதைகளில் ஹைக்கூவின் அசல் லட்சணம் அழகாகக் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றே சுற்று மெதுவாக !

விருட்சக் கொப்பில் ஒரு உயிர் ....

குருவிக் குஞ்சு !

"

மனித நேயம் இக்கவிதையில் இழையோடுகிறது. ''மந்திரம் போல் சொல் வேண்டும்'' என்ற பாரதியின் கூற்றுக்கிணங்க தந்தி மொழி கொண்டு கவியாக்கும் திறமை தன்னிடமுண்டு என்பதை அஸீஸ் எம். பாயிஸ் இத்தொகுப்பு மூலம் நிரூபித்துள்ளார். நல்ல ஹைக்கூக் கவிஞராக வரக்கூடிய கவித்துவ ஆற்றல் நிச்சயமாக இவரிடமுண்டு. அஸீஸ் எம். பாயிஸின் எதிர்கால வளர்ச்சிக்குப் பிரார்த்திக்கிறேன்.

எம். எச். எம். ஷம்ஸ்
34, கோட்டகொட,
வெலிகம.
2001. 07. 07.

இதயவுரை

" இளங் கவிபா யிஸ் மின்னல் போன்று
இயற்றிய ஹைக் கூக்கவிகள் சான்று
இவர் திறமை கூற
இனி மகிமை ஏற
இன்னும் வித் தம் இறைவா ஊன்று "

கவிஞர் யாஸீன் ஸாலிஹ் (ஓய்வு பெற்ற கணக்காளர் இ.போ.ச) ஒலுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுரை

ஹைக்கூவுக்குள்ள மரபை இவர் சிறப்பாகப் பேணியுள்ளார்

எழுத்தும் பேச்சும் மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் இரு பிரதான ஊடகங்கள். கட்டுரை, கவிதை, கதை முதலான எழுத்துக்கள் உள்ளக்கிடக்கைகளை தெளிவான, முறையான அமைப்பில் முன்வைக்க உதவுகின்றன. இவற்றுள் கவிதைகளின் பணி அளப்பரியது. கருத்துக்களை ஆழமாகவும், அகலமாகவும், அதேநேரம் அழகாகவும் குறைந்த சொற் பிரயோகத்தில் முன்வைக்க கவிதைகளே சிறந்ததொரு சாதனமெனின் மிகையன்று.

சொற் சுருக்கமும், பொருட் செறிவும் கவிதைகளில் இருக்கும். நளினமாகவும், நயமாகவும் நிகழ்த்தப்படும் உரைகளில் கவர்ச்சி இருக்கும். எனவேதான் இறை தூதர் நபி முஹம்மது (ஸல்) அவர்கள்; ''நிச்சயமாக கவிதைகளில் ஞானமுண்டு, உரைகளில் கவர்ச்சியுண்டு" என மொழிந்தார்கள்.

கவிஞன் ஒரு கலைஞன். அவன் ஒரு ஓவியன் போன்றவன், ஓவியன் தான்வரையும் ஓவியத்திற்கு முதலில் தன் உள்ளத்தை ஏடாக்குகிறான். கவிஞனின் கற்பனையும் அவ்வாறே, ஆனால் ஒரு சிறு வித்தியாசம்; கவிஞனின் கற்பனை தத்ரூபமானது. தூரிகையின் வர்ணத்தில் ஓவியம் அழகு பெறும். கவிதை வார்த்தைகளாலேயே மெருகூட்டப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் பேணும் கவிதைகளில் இலட்சியமும், இரசனையும் உண்டு. இலக்கணம் பேணும் கவிதைகளில் இலட்சியம் மட்டுமே உண்டு. இந்த வகையில் புதுக் கவிதைகள் மரபுக் கவிதைகளிலிருந்து வேறுபடுகின்றன. உணவருந்துவதன் நோக்கம் பசியைத் தீர்ப்பது. ருசி என்பது இரண்டாம் தர நோக்கமே. சிலபோது புதுக் கவிதைகளில் ருசியையும் உணர முடிகின்றது. இந்த வகையில் சகோதரர் அஸீஸ் எம். பாயிஸ் அவர்கள் புதுக் கவிதையின் புதுமைப் படைப்பாக ''ஹைக்கூ'' வடிவில் யாத்துத்தந்துள்ள இக்கவிதைகள் அர்த்த புஷ்டியானவை. ஹைக்கூவுக்குள்ள மரபை அவர் சிறப்பாகப் பேணியுள்ளார். நொடி சொல்லி அவிழ்க்கக் கேட்பது போல் ஆரம்பமும், வாசகனை அதிசயிப்பில் ஆழ்த்தும் வண்ணம் விடையாக முடிவும், அமைந்திருப்பது கவிதையின் சுவையைக் காப்பது போல் இருக்கின்றது.

ஒரு கவிதையைப் படிக்கும் போது மற்றக் கற்பனை எதுவாக இருக்க முடியும் என ஆதங்கத்தோடு நோக்க வேண்டிய நிர்ப்பந்தம் வாசகனுக்கு ஏற்படுகின்றது. உதாரணமாக;

நன்றியற்ற மனிதர்கள்.
துயிலெழுப்பியதற்குப் பரிசு சிரச்சேதமா .....?
சேவல்!

என்ற கவிதையில் இத்தகைய உணர்வை வாசகர் பெறுவது திண்ணம், என்பதே என் எண்ணம்.

ஒரு கவிதையில் கவிஞர் 'வதந்தி' எவ்வளவு வேகமான 'இலத்திரனியல் தந்தி' என்பதை யாக்கும் போது கொண்டுவரும் கற்பனை மிக இங்கிதமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னஞ்சல் வேண்டாம்.

மிக வேமாகப் பரப்பலாம் ......

வதந்தி !

காதலுக்கு கண்ணில்லை என்பார்கள். அல்லது காதல் குருடானது என்பார்கள். அதனால் எத்தகைய விபரீதமும் நடக்கலாம். காதலுக்காக எத்தனை கொலைகள் ! தொல்லைகள் !. ஆனால் இத்தகைய விபரீதங்கள் வேறு வகையில் இன்று ஏற்படுகின்றன. இதை கவிஞர் இப்படிக் கூறுகிறார்.

காதலுக்கு மட்டுமல்ல

கண்ணிவெடிக்கும் கிடையாது .....

கண் பார்வை !

எத்தனை தத்ரூபமான கற்பனை !!

ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே என்பது யாரோ ஒருவரின் ஞான போதனை. ஒரு ஆணின் முன்னேற்றத்திற்குப் பின்னும் ஒரு பெண் இருக்கலாம், எதிர் மறையும் பொருந்தும். ஆணவம் அழிவது தகும். அதை விட மாதரிடம் மயங்கி அந்தஸ்திழந்து சபல முற்றோர் எத்தனை: மங்கையின் ஒரு சிறு புன்னகைக்கு அத்தனை சக்தி. கவிஞரின் ''உயிர்ச்சிறகுகளில்'' என்னை மிகவும் கவர்ந்த ஒரு சிறகு இது;

ஆணவம் வேண்டாம்.

கவிழ்த்து விடுவேன் இராச்சியத்தை ......

பெண்ணின் புன்னகை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தமாகக் கூறின் இதில் உள்ள அத்தனை கவிதைகளும் அதிசய கற்பனைக் கருவாகக் கொண்டவை. வாசிப்பில் ரசனை தரக்கூடியவை. இளங் கவிஞர் பாயிஸின் ஊக்கம் போற்றப்பட வேண்டியது. இன்னும் இது போன்ற சிறந்த ஆக்கங்களை அவர் தரவேண்டுமெனக் கேட்கிறேன்.

வாழ்க கவிஞர் !
வளர்க அவர் முயற்சி !!

அஷ்ஷெய்க் எச். ஐ. ஹைறுல் பஷர்,
B. A. Hon (Ceylon) M.A. (Soodan),
சிரேஷ்ட விரிவுரையாளர்,
ஜாமிஆ நளீமிய்யா,
பேருவளை — இலங்கை.

இதயவுரை

அன்பு பாயிஸ்!

ஒலுவிலின் அடுத்த தலைமுறையைக் காப்பாற்ற உங்களால் முடியும். நல்ல புத்தங்களை படியுங்கள். இன்னும் நிறைய எழுதுங்கள். எதிர்காலத்தில் நிச்சயம் நீங்கள் ஜெயிப்பீர்கள். பலரையும் விட நிச்சயம் நீங்கள் உயர்வீர்கள்.

அன்புடன் ஒலுவில் அமுதன், அக்கரைப்பற்று.

இதயவுரை

''எழுத்துலகில் நீயும் நிரந்தர முகவரி பெற்றாய். உன் பணி வானம் வரை விரியட்டும் அல்லது உன் பணிக்குள் வானம் சுருங்கட்டும்''

கவிஞர் : எம். நவாஸ் சௌபி
(தென்கிழக்கு வளாக முகாமைத்துவ பீடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழ்ந்தமிழுரை

உரிமையோடு உங்களுடன்...

என்பேனாவுக்கும் சக்தியுண்டென்று நினைக்கிறேன். இல்லையென்றால், என் சொந்த மண்ணிலும், கிழக்கிலங்கையிலும், முதலாவது ஹைக்கூ கவிதைகள் தொகுதியாக இவ்வளவு சீக்கிரத்தில் இன்று இத்தொகுதியை நான் வெளியிட்டிருக்க முடியாது. என்பேனாவின் சக்தி இறை சக்தி. இறை சக்தியே என்றென்றும் என் சக்தி.

நான், மௌனமாகிவிடும்போதெல்லாம் என் மனசு ஒரு ஆலவிருட்சமாகிவிடும். அப்போது அதில் ஆயிரம் உயிர்க்கூடுகள். ஆம் கவிதைகளின் உயிர்க்கூடுகள். என் கவிதைப் பறவைகள் அக்கூடுகளில்தான் முட்டையிட்டு அடைகாத்து உயிருள்ள கவிதைக் குஞ்சுகளைப் பொரித்து அதனை இலக்கிய வானுக்குள் அடிக்கடி பறக்க விடுகின்றது.

என் கவிதைப் பறவைகள் உயிருள்ளவை, உணர்வுள்ளவை, மேலும் என் கவிதைப் பறவைகளால் மௌனமாய்ப் பேசவும் முடியும். மௌனமாயிருந்தே ஒரு மாபெரும் பூகம்பப் புரட்சியை ஏற்படுத்தவும் முடியும். இதனை நான் சொல்வதை விட என் பறவைகளோடு பேசிப் பார்த்து நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள், புரிந்து கொள்ளுங்கள். என் பறவைகள் புதிதாய் உதிர்த்த சிறகுகள் தான் இங்கு சேகரிக்கப்பட்டுள்ளன. என் பறவைகளின் சிறகுளிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருண்டு. பேசும் சக்தியும் உண்டென்று நான் சொல்லுகிறேன். பொய்யென்றால் நீங்களே சோதித்துப் பாருங்கள். சிறகுகள் பல விதம். அதிலிது ஹைக்கூச் சிறகுகள். இது என் உயிர்ச் சிறகுகள். என் உயிரின் சிறகுகள்.

புதுக்கவிதைகளில்தான் மிகுந்த ஈடுபாடு. நான் கொண்டிருந் தாலும். ஒரு புத்தகமே போதும் அளவிற்கு என் புதுக்கவிதைகள் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தாலும். அவற்றை விடுத்து இத்தொகுதியை நான் முதன் முதலில் வெளியிடுகிறேனென்றால் அதற்குக் காரணம் இரண்டு. ஒன்று. எல்லோரும் புதுக்கவிதை களையும். மரபுக் கவிதைகளையும்தான் எழுதி புத்தகமாக வெளியிடுகிறார்களேயன்றி கிழக்கில் இதுவரை யாரும் ஹைக்கூக் கவிதைகளை நூலாகவெளியிட (நானறிந்தவரை) முன்வரவில்லை. எனவே அதனை நான் வெளியிட்டால் என்ன என்று எனக்குள் எழுந்த ஆதங்கம். இரண்டு எதையும் வித்தியாசமாகவும். புதுமையாகவும். செய்யவேண்டுமென்ற எனது கொள்கை.

இத்தொகுதிக்கான இவ்வளவு ஹைக்கூக்களையும் எழுத பல இரவுகளின் தூக்கத்தை நான் தொலைத்திருப்பேனென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் மூன்றே மூன்று பகல்களைத்தான் நான் எடுத்துக்கொண்டேனென்றால் நீங்கள் நம்புவீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இலக்கியப் பசியறிந்து அதற்கு அடிக்கடி புத்தகங்களால் விருந்து வைக்கும் எனது ஆசிரியர் (எனது நண்பர் என்று கூடச் சொல்லலாம்) மதிப்புக்குரிய எம். ஐ. யஹ்யா (இலிகிதர், இ.து.அ.ச. திருமலை) அவ ர்களே. இத்தொகுதிக்கான ஹைக்கூக்களை மூன்று நாட்களுக்குள் எழுதிமுடிக்குமளவுக்கு எனக்குள் ஒரு உத்வேகம் எழக்காரணமும் அவரே. அவர் ஒரு சிறந்த வாசகர் என்பதே பலருக்குத் தெரிந்த உண்மை. ஆனால் சிலருக்கே தெரிந்த ரகசியம் அவரும் ஒரு சிறந்த கவிஞர் என்பது. இத்தொகுதியின் வெளியீட்டுக்காக நான் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு அவரின் உதவிகள் என்றென்றும் மறக்க முடியாதவை. நன்றிக்குரியவை.

மேலும் இத்தொகுதியின் வெளியீட்டுக்காக மற்றுமொரு வகையில் என்னோடு கூடவேயிருந்து சிரமங்களையும் பாராது தனது உதவிகளையும், ஒத்தாசைகளையும் புரிந்த பிரபல கவிஞரும், சிறுகதை எழுத்தாளரும், நாவலாசிரியருமான ஓலுவில் அமுதன் (இலங்கை வங்கி - ஹிங்குராணை) அவர்களும், என்றென்றும் என் நன்றிக்குரியவர்.

மேலும் இத்தொகுதியினை வெளியிடும் முயற்சியில் ஆரம்பத்திலிருந்தே என்னோடு பாடுபட்ட என்றும் என் மாறாத நேசத்திற்குரிய நண்பர்கள், கவிஞர் அஷ்ஷெய்க் இஷட். எம். நிழாமுதீன், பாடகரும், இலக்கிய ஆர்வலருமான ஈ. எல். பைசர் ரஹ்மான், நிந்தவூர் கவிஞர் எம். ஏ. எம். மாஹிர் (ஓ. ஐ. சி. கிராமிய தொழிற்பயிற்சி நிலையம் - பாலமுனை), கவிஞர், ஜெமில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹசன், கவிஞர் எஸ். எல். அன்வர், நண்பன் ஏ. எல்.இமானுள்ளாஹ், ஏ. எல். ஆரிப் அன்புச் சகோதரர்கள் அஸீஸ் எம். பைறூஸ், ஐ.எல்.றிஸ்வி. இவர்களுடன் பிரிதொரு வகையில் உதவி கவிஞர் ஐ. பி. எம். லாஹிர் (ஓய்வுபெற்ற கணக்காளர். இ.போ.ச.) கவிஞர் அன்புடீன் இவர்களுடன் அங்கி ள் எம்.சீ.எம். றபீக் (எச்.என்.பீ - அக்கரைப்பற்று) அங்கி ள் எம்.சீ.எம். தாஜுதீன் (மக்கள் வங்கி அட்டாளைச்சேனை) ஆகியோர்களையும் நான் மறப்பதற்கில்லை. மேலும். இம்முயற்சிக்கு சகல வகைகளிலும் உதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரி த்துக் கொள்ளும் அதேவேளை இறுதியாக உங்களிடம் ஓ ொரு வேண்டுகள்.

நான் சேகரித்துத்தந்த " என் உயிர்ச் சிறகுகள்" பற்றி உங்கள ' உண்மையான விமர்சனங்களையும். கருத்துக்களையும் தயவுசெய்து எனக்குத் தெரியப்படுத்துங்கள் அல்லது அஞ்சலிடுங்கள். ஏனெனில் உங்களின் ஆக்க பூர்வமான விமர்சனங்களில்தான் என்னை நான் செதுக்கிக்கொள்ள முடியும்.

" நன்றி "

இஃது என்றும்
உங்கள் நெஞ்சங்களில்
வாழ விரும்பும்,உங்கள் கவிஞன்,
அஸீஸ் எம். பாயிஸ்
194, வைத்தியசாலை வீதி,
ஒலுவில் - 02.
த.கு. எண் : 32360.

2001. 07. 19.

இதயவுரை

மூன்றாம் பிறைக்குள் தான்
முழு நிலவும் இருக்கிறது.
அஸீஸ் எம். பாயிஸ்
முளையில் தெரிகிறது
நீங்கள் விளை பயிரென்பது.

வாழ்க! வளர்க!
வாழ்த்துக்கள் !

கவிஞர் அன்புடீன்
அட்டாளைச்சேனை.

இதயவுரை

பிரியமுள்ள பாயிஸ் ! நெஞ்சங்களில் நேசங்களை நீ எழுது! இந்த சமூகம் இன்னும் பிரியாமல் இருக்கட்டும் !! என்றும் உன்பணியை வாழ்த்தும்

கவிஞர் : எஸ். ஜலால்டீன், ஒலுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE EMBASSY OF JAPAN
IN THE DEMOCRATIC SOCIALIST
REPUBLIC OF SRI LANKA

20, Gregory's Road,
Colombo 7

10th July 2001

Mr.Azeez M. Faiz
(Reporter of Thinakkatir)
194, Hospital Road,
Oluvil –02 (E.P.)
P.C.32360

Dear Mr.Faiz,

I thank you for your letter dated 29th June 2001 requesting for the Japanese characters for "Haiku Poems".

I am pleased to enclose a bold print of the Japanese characters which means "Haiku Poems" for your cover design. I wish you all the best in your enterprise.

Yours sincerely,

T.Noda
Second Secretary
Information & Cultural Affairs

Enclosed; as stated

நன்றி
ஜப்பானிய தூதரகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பூவின் காதிலும்

அப்படியென்ன ரகசியம் சொல்கிறது

வண்டு !

ஊதியம் வேண்டாம்

ஊருக்கே பாடுகிறேன்.....

உச்சிக்கிளையில் ஒற்றைக்குயில் !

காப்பாற்ற ஓடியது நத்தை

அறியாமல் கால்வைத்தகுழந்தை.....

கீழே கண்ணிவெடி !

நன்றியற்ற மனிதர்கள்

துயிலெழுப்பியதற்குப் பரிசு சிரச்சேதமா.....

சேவல் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலத்தையே சிறைப்பிடிக்கிறதே

இரு சின்னப் பறவைகள் .....
விழிகள் !

மின்னஞ்சல் வேண்டாம்
மிகவேகமாகப் பரப்பலாம் .....
வதந்தி !

வெட்கப்படும் பெண்மீன்கள்
குளத்தில்குளிக்கிறான் சிறுவன் .....
அம்மணமாய் !

தாலாட்டுப்பாடுகிறேன்
தலையசைத்து தூங்குங்கள் .....
மலர்வனத்தில் தென்றல் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் கொடுத்த சாபமிது
சுற்றிக் கொண்டே இருக்கிறதே .....
சூரியன் !

என்ன செருக்கு
ஒரு முட்டைக்கு ஊரைக் கூட்டுகிறதே கோழி .....
ஆமை !

சாவதற்கென்றே
சாப்பிடுகிறது வெடிமருந்தை.....
பட்டாசு !

காதலுக்கு மட்டுமல்ல
கண்ணிவெடிக்கும் கிடையாது.....
கண்பார்வை !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பகர்ணன் தோற்று விட்டான்
இப்படி உறங்குகிறதே.....
உலக சமாதானம் !

வீட்டுச் சிறைக்கு காவல் வேண்டாம்
நான் போதும்.....
தொலைக்காட்சி !



தாய் மடி
சலனமின்றி உறங்கும் குழந்தை.....
பூவிதழில் பனித்துளி !

தாஸிகள் கூட்டம்
நடுவில் ஒரேயொரு ஆண்மகன்.....
நந்தவனத்தில் வண்டு !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியாக ஒருவார்த்தை பேசேன்

விடைகேட்டது .....

காம்பிடம் பூ !

வானவில் துண்டுகள்

வாசலில் எப்படி ?

உடைந்த வளையல்கள் !

மெல்லிய கவிதை

கொடியில் கட்டி வைத்தது யார் .....?

மல்லிகை !

அட! மரத்திலும் காய்க்குமா?

வெடிகுண்டு.....

பப்பாசிக்காய் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகலத்துச் சிரிக்கிறார்களே ?
யார் சொன்னது முல்லாவின் கதை .....
சோலைக்குள் தென்றல் !

ஐயோ ! பகற்கொள்ளை
யாரும் தடுக்கவில்லையே.....
சீனி மூடையில் எறும்பு !

எனக்கும் சங்கீதம் தெரியும்
காதுக்குள் பாடியது.....
நுளம்பு !

கடவுளும் புகைக்கிறாரோ
வான வீதியெங்கும் சிகரட் புகை .....
வெண்மேகம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேகம் சிறகுலர்த்திச் சென்றதா?

தடயமிருக்கிறதே .....

புல்லில் பனித்துளி !

உலகம் எதனைச் சிந்திக்கிறது

மாதத்திற்கொரு முறை .....

அமாவாசை இரவு !

சிப்பியின் வயிறு ! வயல் வெளி !

இரண்டிலும் முத்தாகிறதே .....

மழைத்துளி !

எதிரியைக் கடிக்க எதற்கு

இத்தனை பற்கள் ......

பலாப்பழம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலச்சிறையில் கால்கள்
சிறகடிப்பில் பயனில்லை.....
மரங்கள் !

எவ்வளவு சுற்றுகிறேன்
தலை சுற்றவில்லையே ......
வீட்டத்தில் மின்விசிறி !



என் காதல் காவியத்திற்கு
நீயளித்த மா பெரும் பரிசு .....
மௌனம் !

கத்திக் கீறலில்
விரிந்த தக்காளி .....
அவள் உதடுகள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகப்பருப் பூக்கள்
நெற்றியில் அழகாய்ப் பொட்டு .....
பௌர்ணமி நிலவு !

முன்னறிவிப்புக்கு
ஊடகம் வேண்டாம்
முற்றத்தில் காக்கை !

ஆணவம் வேண்டாம்
கவிழ்த்து விடுவேன் ராஜ்ஜியத்தை .....
பெண்ணின் புன்னகை !

சுவர்க்கத்து மலர்கள்
சிந்தியது ஒரு துளித்தேன் .....
கனவில் நீ !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேற்றில் மட்டும் தானே பூக்கிறது
வெண்தாமரை .....
காக்கைகளிடம் ஒற்றுமை !

அதிசய சித்திரம்
அவசரத்தில் வரைந்தானா ஆண்டவன் ?
மின்னல் !

காயப்பட்ட இதயம்
மென்மையான ஒத்தடம் .....
தழுவியது மாலைத்தென்றல் !

போட்டிவேண்டாம்
உன்னிடம் ஜெயிக்க முடியாது .....
குயிலின் கீதம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயரத்திலிருந்து விழுந்தாலும்

காலுடைய வில்லை.....

ஓடுகிறதே நதி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கோடி எதிரிப்படை

நடுவில் ஒரேயொரு போர் வீரன் .....

சந்திரன் !

இனியில்லை அந்த வரம்

பிறக்கு முன்னே பூமியைப் பார்ப்பது .....

முந்திரி விதை !

முடிந்த மட்டும் வரைந்து கொள்

சளைக்கமாட்டேன் அழிப்பதில் நான் .....

கடல் அலை !

அஞ்சலி செலுத்த மறந்து

அதிசயிக்கிறார்களே இக்கல்லறையில் .....

தாஜ்மஹால் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகெல்லாம் இருட்டு
யாரும் பார்க்க மாட்டார்கள் .....
கண் மூடிப் பால்குடித்தது பூனை !

நிலவின் உறக்கம்
பௌர்ணமியில் அமாவாசை .....
சந்திர கிரகணம் !

தண்ணீர் ! தண்ணீர் !
நாவறண்ட நாய் .....
பாவம் பக்கத்தில் கானல் !

அவசரமாய் ஒரு கவிதை
குழந்தையின் பாதத்தில்
மிதிபடும் ஒரு பூ !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போது சிறகு முளைத்தது
பறக்கிறதே வர்ணக் காளான்கள் .....
மழை நாளில்குடைகள் !

தொடர் வாக்கியம்
வான வீதியில் அழகிய அதிசயம் .....
கடல் காக்கைகள் !

உன்முத்தம் தேவையில்லை
யார் தடை விதிப்பார்கள் .....
என் கனவுகளுக்கு !

காற்றே சற்று மெதுவாக
விருட்சக் கொப்பில் ஒரு உயிர் .....
குருவிக்குஞ்சு !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சூரியன் கடத்தப்பட்டதா?
பகலிலே இரவு .....
சூரிய கிரகணம் !

தொட்டில்குழந்தை
தூக்கத்தில் சிரிக்கிறது .....
அட ! எழுதாத ஹைகூ !

பெப்ரவரி 04 சுதந்திர தினம்
சொன்னதைச் சொன்னது .....
கூண்டுக் கிளி !

ஓர் இறுதி ஊர்வலம்
அழுகிறாளே அவள் .....
ஓ ..... ஏற்கப்பட்டு விட்டது அவன் காதல் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ எரிக்க வேண்டாம்
உன்பார்வையில்தான் இருக்கிறதே .....
நெருப்பு !

உண்ணாமல் நிறைந்தது வயிறு
சாப்பிடுகிறாயா மகனே .....
அன்பான தாய் !

போர் முரசை நிறுத்து
தொட்டிலில் தூங்குகிறது .....
என் இதயம் !

கம்பிச் சிறையில் சமாதானம்
விடுவிக்க மனமில்லை .....
கூண்டில் வெண்புறா !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகளைத்தானே சிதைத்தாய்
இன்னும் என்னிடம்தானே இருக்கிறது .....
என் கண்கள் !

கின்னஸில் பதிய வேண்டும்
இந்தப் பாறையும் பூக்கிறதே .....
சிறைக்காவலர் முகத்தில் புன்னகை !

கடவுளிடம் நேரடிப் பயணம்
கட்டணம் எதுவுமில்லை .....
எயிட்ஸ் !

விலை பேசப்பட்டது
பெண்ணினத்தின் எதிர்காலம் .....
சீதனம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயமிருக்கிறதா எனக்கு
யார் சொன்னது ! சுத்தப் பொய் .....
அணுகுண்டு !

எந்த முனிவன் சாபமிட்டது
எழும்ப முடியாமல் .....
இலங்கை சமாதானம் !

அவசரமாய் முளைத்தது
ஆகாய வேர்கள் .....
மின்னல் !

கற்பாறை
கரைக்கும் ஒரேயொரு துளி .....
பெண்ணின் கண்ணீர் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைக்காலில் முனிவர்கள்
தவம் செய்ய நல்ல இடம்தான் .....
தாமரைக்குளம் !

அசந்து போனது அன்னம்
அட ! எத்தனை அழகு .....
நடைபயின்றது காக்கை !

திறந்து விடு புறாக்களை
பறக்கவிடு கொடிகளை ! கைதட்டு .....
இன்று சுதந்திர தினம் !

கடலே ! இப்போது விடைகொடு
மீண்டும் நதியாக வந்து சங்கமிக்கிறேன் .....
நீராவி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவீடு ! ஈரம் காயவில்லை
மழை வருகிறதே.....
கட்டையில் கறையான் கூடு !

அவள் இன்னும் தூங்க வில்லை
சொல்லி விட்டுப் போனது.....
யன்னல் வழியே மின்மினி !

விஞ்ஞானம் பிழைக்கிறது
மரமின்றியும் பூ மலருகிறதே.....
காதல் !

உனைக் கண்டால் உயிர் விடுவேன்
தவமிருந்தது.....
பனிக்கட்டி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயம் காம்பில் தேனருக்கிறது
ஒரே வர்ணப்பட்டாம் பூச்சிகள்.....
றோஜாப் பூ !

தங்கத்தின் விலை வீழ்ச்சி
காரணம் நீதான்.....
உன்கழுத்தில் சங்குமாலை !

பலமாக அடி
வெற்றி தருவேன்.....
கால்ப் பந்து !

யார் எடுத்தது
ஓடையின் வெளியே கயல்களை.....
படபடத்தது அவள் விழிகள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்களால் மூண்டது நெருப்பு
எரிந்தது வாழ்க்கை .....
சந்தேகம் !

உருவமில்லாக்குருவி.
சிறைப்பட்டுக்கிடக்கிறது கூண்டில் .....
உயிர் !

முடக்கு வீதிகளில்
குறுந்தூர ஓட்டமா ?
கிளைகளில் விளையாடும் அணில்கள் !

ஹைக்கூ எழுத அமர்ந்தேன்
சுருங்கி ஒரு ஹைக்கூவானது.....
என் நிமிடங்கள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துப் போனால்தான் வாழ்க்கை

கற்றுத் தந்தது.....

நாணல் !

பட்ட மரம்

நிறைய பச்சை இலைகளா ?

ஓ... பச்சைக்கிளிகள் !

கோபுரமே சாய்ந்து விட்டது

எஞ்சியிருக்கிறதே ஒருகுடிசை .....

வேகமானது புயல் !

ஈற்கில் மெத்தை

மௌனமாய் உறங்கியது ஒரு ஹைக்கூ.....

கூட்டில் மூன்று முட்டை !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் வரைந்த சித்திரமிது
இத்தனை அழகாய்.....
பட்டமரம் !

தொண்டைக்குழியில் உயிர்
கண்கள் பேசியது உண்டாயா மகனே.....
தாய் !

நிலப்பொறியில் மாட்டிக் கொண்டது
ஒரு சிறகுப் பறவை.....
மரம் !

வெட்கப்படுகிறது பூவரசம் பூ
கிளையில் கொஞ்சிக் கொள்ளும் .....
கிளிகள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிலே வெயில்

போர்வைக்குள் எப்படிக்குளிர் .....?

ஓ .....! உன் நினைவு !

உரசிக்காட்டலாம் தங்கமென்றால்

உனக்குப் புரியாதே.....

இது காதல் !

சந்தேகப்பட எதுவுமில்லை

அவளுக்கு மட்டுமே தெரியுமந்த உண்மை.....

தாய்மை !

கோலத்தின் மேல் ஒரு கோலம்

வாசலில் வரைந்தது.....

மழைத்துளி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குமா காதலில் தோல்வி

உயரத்திலிருந்து தற்கொலை செய்கிறதே.....

அருவி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன இது
எதிர்ப்பு ஊர்வலமா .....?
வானில் கறுப்பு மேகங்கள் !

இருட்டிலா முத்தமிடுவது
என் உடம்பெல்லாம் காயம் .....
வெளவாலிடம் மாங்காய் !

இரவில்தானே வர வேண்டும்
பகலிலும் வருகிறதா அமாவாசை .....
கரும் பூனை !

சிறகு முளைத்ததால்
சருகு பறக்கிறதா.....?
கபில நிற வண்ணாத்தி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவலையே அவள்தான் எழுப்பிவிட்டாள்

காலையில் பேச வருகிறார்கள் .....

வரதட்சணையில்லாத் திருமணம் !

காற்றே கணக்குச் சொல்

எத்தனை அநாதைப் பிணங்கள் காட்டுக்குள்

கோர யுத்தம் !



கற்பழிக்கப் போகிறாயா ?

கவலையாய்க் கேட்டாள் .....

கருவண்டிடம் கள்ளிப் பூ !

விளக்கே எரிக்காதே

விடியுமட்டுமாவது வாழட்டுமே.....

விட்டில்கள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுக்கட்டும்

அத்தனையும் எனக்குத்தான் .....

இலவம் மரத்தில் ஒற்றைக்கிளி !

உருவம் தருவேன்

உயிர்மட்டும் தரமுடியாது.....

கல்லிடம் உளி !

சூரியன் செத்து விட்டதா ?

கறுப்புடையணிந்து அழுகிறதே மேகம் .....

மழை !

சருகு பிறந்தது

பூமி காதலித்தது .....

கடத்திச் சென்றது காற்று !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கர்ப்பவதி
வயிற்றைக் கிழிக்கிறார்களே .....
பாவம் ! சிப்பி !

சலவை செய்கிறாள் சிறுமி
உலகம் பறக்கிறது .....
சோப்பு நுரைக்குமிழ் !

விரித்த வலை வீணாகிறது
எதுவும் அகப்படவில்லையே .....
பசித்திருந்தது சிலந்தி !

விடியப் போகிறது இன்னுமில்லை உறக்கம்
எரிந்து கொண்டிருக்கிறது .....
நெஞ்சில் காதல் தீ !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்திமாலை

கொடியிலே சிரிக்கும் மல்லிகை .....

சிந்தனையில் நீ !

கண்ணாடி தேவையில்லை

நானும் முகம் பார்ப்பேன் .....

குளத்து நீருக்குள் நிலவு !

கதறக் கதற

ஒரு கற்பழிப்பு .....

றோஜா மலரில் வண்டு !

நண்பனின் வீடு

நன்னாரித் தேனீர் .....

ஞாபகத்தில் நாம் கடைசிச் சந்திப்பு !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைந்து கொண்டிருக்கிறதே
விரைவாக எரித்து விடு .....
துளிரிலே காதல் !

கருணை
தயவு செய்து பொருள் கூறுங்களேன் .....
கண்ணிவெடி !

மல்லிகை வாசம்
ரகசியமாய்ச் சொல்லியது இதயம் .....
நீ வருகிறாய் !

இத்தனை கயவருக்குள்
பாவம் ஒரு அழகி .....
கள்ளிப் பூ !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தைக் கடிக்கும்

உன் நினைவு .....

காலில் புதுச் செருப்பு !



நல்ல பயணம்

பிறர் முதுகிலல்லவா .....

எருதின் மேல் கொக்கு !

ஒளிச் சமிக்ஞை

தூண்டில் காரன் உசாரானான் .....

ஆற்றுக்குள் புரண்டு போனது மீன் !

வானவில் பறக்கிறது

இரண்டு வர்ணம் தொலைந்து விட்டதா .....

பஞ்சவர்ணக்கிளி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மயான வெளி ! பட்ட மரம் !

ஒற்றைக் கழுகு .....

அட ! தனிமைக்கு தனிமைத்துணை !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசய ராகம்

இன்னும்தான் முடியவில்லை கண்டுபிடிக்க.....

குயிலின் கீதம் !

என்னை மீறி பிறேக் விழுந்தது

வீதியைக் கடந்தது .....

ஒரு சின்ன ஆமை !

பிறந்து விட்டது சமாதானம்

இன்னும் கண் விழிக்கவில்லை .....

கூட்டில் வெண்புறாக்குஞ்சு !

வாலிப உள்ளம்

கனிந்தகனவு .....

தலையில் நரைத்த முடி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களத்தில் பிறந்தாயா ?
உடம்பெல்லாம் ரத்தம் .....
தக்காளி !

ஒடுக்கப்பட்டதால் தான்
கொதித் தெழுகிறதோ .....
திறக்கப்பட்டது சோடா !

அவன் செத்து நாளாயிற்று
இன்னும் சாகவில்லை .....
அவனது ஆசை !

இலட்சம் இறக்கை
மரங்களாலேயே முடியவில்லை.....
சிறகடித்தது பெங்குயின் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை மயில்கள்
வீதியில் சமாதான ஊர்வலமா .....?
பள்ளி மாணவிகள் !

அவசரத் திருமணம்
அழைக்க மறந்து போனாள் .....
தன் காதலனை !

வேகமாய் வருகிறது ரயில்
அவசரமாய்த் தடுத்து நிறுத்து.....
தண்ட வாளத்தில் காலுடைந்த எறும்பு !

சில நிமிடத் திரைப்படம்
மழை வருவதைச் சொல்லியது .....
வானவில் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்ட முடியாமல்

உடைந்து போனது .....

மனசு !

ஓடும் பஸ்

கல் நெஞ்சக் காரர்கள் .....

வாயிலில் தொங்குகிறாள் கர்ப்பிணி !

இதயத்தில்குத்திய

அவளது வார்த்தை .....

விரலில் ஏறியது தையல் ஊசி !

ஒற்றைக் கால் தவத்தில் கொக்கு

கலைக்க வேண்டாமென்று ஒதுங்கிச் சென்றது

கெண்டை !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த மாளிகை
மூலையில் சின்னதாய் ஒரு தீபம் .....
உடைந்த மனதில் நம்பிக்கை !

சும்மா இருந்தவன்
பைத்திய மாய்ச் சிரித்தான் .....
மேசையில் அலாரம் !

அப்பிள் வெட்கித்தது
கோவை விரிந்தது .....
நாணத்தில் அவள் புன்னகை !

தூரத்தில் காதலன்
தூதனுப்ப ஆளில்லை .....
சோகத்தில் சூரியகாந்தி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலி இருக்கிறது
கம்பியைக் காணவில்லை .....
உறக்கத்தில் காவலாளி !

கலர் கனவுகள்
உலாவந்தது ஐந்து மணி .....
ஆடைத்தொழிற்சாலைக் கன்னிகள் !

குடும்பக் கட்டுப்பாடு
அதனால்தான் ஒரு பிள்ளை .....
கவலையாய்ச் சொன்னது யானை !



மது அருந்தவில்லை
போதை தலைக்கேறியது .....
அவள் கண்களிலிருந்து மது !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன றோஜா
முகத்தில் பனித்துளி .....
அழுகிறாள் சிறுமி !

சுகமான அணைப்பு
தோளைச் சுட்டது .....
அவளது மூச்சுக்காற்று !

செம்மறி ஆடுகள்
மேய்ப்பவர் யாருமில்லையே .....
வானில் மேகக் கூட்டம் !

தொடாமல் பேசு
எனக்கு நாணம் அதிகம் .....
தொட்டாற் சிணுங்கி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை முறை எண்ணினாலும்
கணக்குப் பிழைக்கிறதே .....
நட்சத்திரப் பூக்கள் !

ஒரேயொரு நாள்
இரவில் சிரித்தவள் காலையில் பிரிகிறாள் .....
உதிரும் மல்லிகை !

காலால் வெட்டினார்கள்
கால் கொண்டு மிதிக்கிறார்கள் .....
எருது மிதிக்கும் வேளாண்மை !

கொலைக்குற்ற மா
தலை கொய்யப்படுகிறதே .....
தேயிலைச் செடி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய் தான் குரைக்க வேண்டுமா ?
பறவையும் குரைக்கிறதே .....
வான்கோழி !

பகல்களைத் தொலைத்து
இரவுகளைச் சேமிக்கிறாள் .....
விபச்சாரி !

நான்தான் ஓடுகிறேன்
நீயுமேன் ஓடுகிறாய் .....
கைக் கடிகாரம் !

முகமெல்லாம் முகப்பரு
அழகாய்த்தான் இருக்கிறது .....
பனித்துளி படிந்த பூ !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் உரைக்கிறார்கள்

இப்படித் தேய்கிறதே .....

நிலவு !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலெழுத்துக் கவிதை
வாழ்வின் அர்த்தம் கூறுகிறது .....
மரணம் !

நாட்டில் கொடும் வரட்சி
விரயமாகிறதே நீர் .....
ஒரு முதிர் கன்னியின் விழிகளில் !

சிறகில்லாமலேயே
பறக்கிறதே .....
காற்றில் பொலித்தீன் பை !

நீண்டதொரு ஊர்வலம்
பாடையில் போகிறது பிரேதம் .....
எறும்புகள் தூக்கிச் செல்லும் புழு !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவில் இட்டுவைத்தாள்
ஒற்றைப் பொட்டு .....
கூந்தலில் ஒற்றை மல்லிகை !

அடுத்த கிரகத்திலிருந்து
அண்ணனின் குரல் .....
காதில் செலுலார் !



உலகதிசயமாய்ப் பதியலாமா ?
" சொக்கலட் " ஐ மிஞ்சுகிறதே ருசியில் .....
இவள் குரல் !

கறுப்பினத்தவரின் விபச்சார விடுதி
அரசு பராமரிக்கிறது .....
நந்தவனம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை உச்சிக்கு செல்கிறதே
செங்குத்தாய் ஒரு வீதி .....
எறும் பூர்ந்த தடம் !

சப்தமிட்டுக் கொண்டுதான் கண் விழிக்கிறது
காதால் கேட்க முடியவில்லை .....
பூவிரியும் ஓசை !

அழகிகள் கொலை
கண்டனம் தெரிவிக்க யாருமில்லை .....
புல்வெளிப் பூக்களை மேயும் ஆடு !

ஜனனத்துக்கான ஒப்பந்தம்
கைச்சாத்திடப்பட்டது இரவில் .....
வரம் பெற்றது தொட்டில் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைத் தியாகம் செய்கிறேன்

உருவாகிறார்கள் பல மேதைகள் .....

வெண்கட்டி !

தலையில் நெருப்பு வை

என் வாழ்வு தொடங்கும் .....

மெழுகுதிரி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசகுடும்பமா ?

விலையுயர்ந்த பட்டாடை .....

வெள்ளை மயில் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தாயகத்தில் ....

இலக்கிய தாகம் கொண்ட [illegible] 22 வயது இளைஞன் தனது சுய முயற்சியினால் ''உயிர்ச்சிறகுகள்'' என்ற ஹைக்கூக் கவிதை நூலை உங்கள் கரங்களுக்குத் தந்துள்ளார். ஆமாம் அஸீஸ் எம். பாயிஸ் பெயர் நிலைக்கும் ஒரு கவிஞர் !

காலத்தின் குரலை கச்சிதமாய் தந்துள்ளார். என் தாயகத்தில் இளையகவி ஒருவர் தோன்ற மாட்டாரா என்ற எனது ஏக்கத்தை அஸீஸ் எம். பாயிஸ் தீர்த்துள்ளார்.

மேலும் அவர் தரமான நூல்களை தர வேண்டும் என்பது எனது அவா...! தூய எண்ணம் கொண்ட அவர் துலங்கத்தான் செய்வார்.

ஜெலீல் அழகுன்
(எழுத்தாளர், கவிஞர், நூலாசிரியர்)
தொ.பே.இல. 067 - 70339

Printed by: ME[illegible], Main Street, Akkaraipattu.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org